1993 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறபோது மாம்பழத்தாறு அணைத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது பத்மநாபபுரம் தொகுதியில் அமைந்திருக்கிறது. இந்த அணைக் கட்டுத் திட்டம் குமரி மாவட்டத்தினுடைய மையப் பகுதியில் இருக்கிறது. ஏற்கெனவே கடலில் வீணாகும் தண்ணீரைத் தேக்க அணையைக் கட்டுவதாக இருந்தால் மாம்பழத்தாறு அணைத் திட்டம் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 18ஆம் தேதி அன்று நான் நாகர்கோவிலுக்கு வர இருக்கிறேன். அன்றைக்கு அந்தப் பகுதியில் இருக்கிற அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேச இருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இது முக்கியமான பிரச்சினை. இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் அரசு இதை முக்கியமான பிரச்சினையாகக் கருதுகிறது. ஏனென்று சொன்னால், நம்மிடத்திலே நீர் ஆதாரங்கள் இல்லாதபோது இருக்கின்ற நீர் ஆதாரங்களை நாம் வீணாக்கக் கூடாது. ஆகவே இதைப் பயன்படுத்துவதில் முனைப்பாக இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. ஆகவே இதய தெய்வம் தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு, வருகிற 18ஆம் தேதி இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய பொதுப் பணித் துறை அதிகாரிகளோடு கன்னியாகுமரி மாவட்டத்தில் நடக்கும் கூட்டத்தில் கலந்துபேசி உடனடியாக எந்தெந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்ற ஆய்வினைச் செய்து, உடனடியாக அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 351, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

351—

கண்ணமங்கலம் பேரூராட்சிக்கு பேருந்து நிலையம்

*11330 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் கண்ணமங்கலம் பேரூராட்சிக்குப் பேருந்து நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே,

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் கண்ணமங்கலம் பேரூராட்சியின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் பெற்று பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணமங்கலம் பேரூராட்சியால் பேருந்து நிலையம் அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்கள் தொகுதியின் சார்பாகவும், அந்தப் பேரூராட்சி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எவ்வளவு காலத்தில் அந்தப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கேற்ற நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டியதிருப்பதால், நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர் விரைவில் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 352, திரு. கே. கந்தசாமி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

352—

கெங்கவல்லி பேரூராட்சிக்கு வலசக்கல்பட்டி ஏரியிலிருந்து குடிநீர்.

*14646—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கெங்கவல்லி பேருராட்சிக்கு வலசக்கல்பட்டி ஏரியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.